**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவினாசி**

**2023 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 20–ஆம், நாள் வெள்ளிக்கிழமை**

**இடைநிலை மனு எண்.18/2020**
**இன்**
**அசல் வழக்கு எண்.641/2012**

பவித்ரா

...மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

1.வேலுச்சாமி
2.சுப்பிரமணியன்
3.முருகசாமி
4.ராதிகா
5.சிவகாமி
6.நிவேதா
7.ராமசாமி
8.சம்பத்
9.கலாமணி

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

10.ராஜசேகர்
11.துரைசாமி
12.விஜயலட்சுமி
13.ஆர்.கோவிந்தசாமி
14.பி.கருப்பசாமி
15.ஆர்.கருப்புசாமி
16.வெங்கடாசலபதி

17.ஏ.வேலுச்சாமி
18.சார்பதிவாளர்

...எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்கும் பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 07.09.2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ப.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 18 வரையிலான எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகததால் அவர்களை ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுச் சொத்தினை பல்வேறு பகுதிகளாக பிரித்து செய்யப்பட்டுள்ள பல்வேறு பரிவர்த்தனைகள் மூலம் பிரிக்கப்பட்டுள்ள இம்மனுச் சொத்துக்களையும், மனுச்சொத்துக்களான வழக்கிடைச் சொத்தினையும் இனிமேற்கொண்டு தனித்தனியாகவோ, உள்ளடக்கிய மொத்தமாகவோ கிரையம் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க கோரியும், மனுச் சொத்தின் உரிமை மூலம் மாண்பமை நீதிமன்றத்திலும், திருப்பூர் முதலாவது கூடுதல் மாவட்ட

நீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளதால் மனுச்சொத்தினை உள்ளடக்கிய வழக்கிடைச் சொத்து குறித்து எவ்வித பதிவுகளும் இவ்வழக்கு முடியும் வரை மேற்கொள்ளக்கூடாது என்று 18 ம் எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரியும், மனுச் சொத்தினைப் பொருத்து எதிர்மனுதாரர்களோ, அவர்களது நண்பர்களோ, அவர்களது உறவினர்களோ, அவர்களது முகவர்களோ எவ்வித வில்லங்கங்களுக்கும் உட்படுத்தக்கூடாது என்று உத்தரவிடக் கோரி கட்டளை 39 விதி 1–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:–

2.1.) எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பிற பரிகாரங்கள் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி 1 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரரின் தகப்பனார் என்றும் 2 முதல் 16 வரையிலான எதிர்மனுதார்கள் சட்ட முரணாக மனுச் சொத்தின் சில பகுதிகளை 1 ஆம் எதிர்மனுதாரரின் பொது அதிகார முகவிடமிருந்து விற்பனை பெற்றவர்கள் என்றும் 17 ஆம் எதிர்மனுதாரர், 1 ஆம் எதிர்மனுதாரரின் பொது அதிகார முகவர் என்றும் 18–ஆம் எதிர்மனுதாரர் சார்பதிவாளர் என்றும் கடந்த 11.09.1998–ல் மனுதாரரின் தந்தை வழி தாத்தா நடராஜ கவுண்டர் காலமானதற்கு பின்னிட்டு மனுதாரரும் , 1 ஆம் எதிர்மனுதாரரும் மனுச் சொத்தினை கூட்டாக தமது உடைமையில் அனுபவித்து வந்ததாகவும் இச்சூழ்நிலையில் மனுதாரர் பாகப்பிரிவினை கோரி

மேற்படி அசல் வழக்கினை 1ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு மனுதாரரின் அத்தை திருமதி.சரோஜினி அவர்கள் மனுச் சொத்தைப் பொருத்து பாகப்பிரிவினை கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்ததாகவும் மனுதாரருக்கும், வழக்கினை 1ஆம் எதிர்மனுதாரர் மற்றும் மனுச் சொத்தினை சட்ட முரணாக விற்பனை பெற்ற 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கும் எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்கண்ட வழக்கு மாண்பமை திருப்பூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு O.S.No.103/2012 ஆக எண்ணிடப்பட்டது என்றும் மேற்படி மனுதாரரின் அத்தையும், மனுதாரரின் தந்தையின் உடன்பிறந்த சகோதரியுமான திருமதி.சரோஜினி அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கானது, இம்மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கினை மறைத்து தாக்கல் செய்யப்பட்டது என்றும் வழக்கு மனுதாரருக்கு எதிராக சட்ட முரணாக ஆதாயம் அடையும் நோக்கோடு 1ஆம் எதிர்மனுதாரரோடு கூட்டு சேர்ந்து மோசடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

2.2.) மேற்படி வழக்கானது மனுதாரரையும், அவரது உரிமைகளையும் மறைத்து முறைகேடாக 1ஆம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரியால் திட்டமிட்டு ஒருதலைப்பட்சமாக ஆக்கப்பட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை

பெறப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணை விசாரணையின் பொருட்டு மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் வாயிலாகவே மேற்படி வழக்கு குறித்த நிகழ்வுகள் தெரிய வந்தது என்றும் பின்னிட்டு மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக் கோரி மனுதாரர் உரிய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது விசாரணைக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி மனு இடைநிலை மனு எண். 771/2018 ஆக முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் இம்மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு நிலுவையில் உள்ள போதே மனுச் சொத்தின் சில பகுதிகளை 1ஆம் எதிர்மனுதாரரின் பொது அதிகார முகவர் வாயிலாக 2 முதல் 12 வரையான எதிர்மனுதாரர்கள் விற்பனை பெற்றுள்ளனர் என்றும் பின்னிட்டு மேற்படி விற்பனை பெற்ற 4 மற்றும் 7 எதிர்மனுதாரர்களிடமிருந்து 13 முதல் 16 வரையான எதிர்மனுதாரர்கள் மனுச் சொத்தினை கிரையம் பெற்றுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

2.3.) மேலும் மனுச் சொத்தினைப் பொருத்து முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மற்றும் இம்மாண்பமை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில்

உள்ளபோதே மனுச் சொத்தின் ஒரு பகுதியை 1ஆம் எதிர்மனுதாரர், 2 முதல் 12 வரையான எதிர்மனுதாரர்களுக்கு சட்ட விரோதமாக விற்பனை செய்துள்ளார் என்றும் மேற்படி மனுவில் 2 முதல் 9 வரையான எதிர்மனுதாரர்கள் இம்மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் தரப்பினார்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் 10 முதல் 12 வரையான எதிர்மனுதாரர்களை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளாக இணைக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இச்சூழ்நிலையில் மேற்படி மனுச் சொத்தில் 13 முதல் 16 வரையான எதிர்மனுதாரர்களும் விற்பனை பெற்றதை மனுதாரர் தற்போது அறிந்து அதிர்ச்சி அடைந்ததாகவும் வழக்குகள் நிலுவையில் உள்ளபோதே 1ஆம் எதிர்மனுதாரரும், மற்ற எதிர்மனுதாரர்களும் மனுச்சொத்தினை பொருத்து தொடர்ச்சியாக விற்பனை உள்ளிட்ட வில்லங்கங்களை ஏற்படுத்தி வருவது மனுதாரர் மனுச் சொத்தினைப் பொருத்து தாக்கல் செய்துள்ள மேற்படி அசல் வழக்கின் சட்டப் போராட்டத்தினை மேலும் கால தாமதமடையச் செய்வதுடன் பல்வேறு சட்ட சிக்கல்களுக்கும் வழிவகுக்கின்றது, மேலும் மனுதாரர் உரிமைகளையும் பாதிக்கிறது என்றும் சட்டப்போராட்டத்தின் வீரியத்தை குறைக்கும் விதமாகவும், மனுதாரரின் செயல்களை சோர்வடையச் செய்யவும், நீர்த்துப் போகச் செய்யவும் செய்யப்படும் ஏற்பாடாகும்.

2.4.) மேற்படி 1.ஆம் எதிர்மனுதாரின் பொது அதிகார முகவரால் எழுதிக்

கொடுக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்திலும் கடந்த 11.06.1998–ல் மனுதாரர் தந்தை வழி தாத்தாவான நடராஜ கவுண்டரால் எழுதிக் கொடுக்கப்பட்ட உயில் ஆவணத்தின் அடிப்படையில் மனுச் சொத்தானது 1 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி உயில் ஆவணத்தின் உண்மைத் தன்மையானது திருப்பூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் O.S.No.103/2012–ல் வழங்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பு, தீர்ப்பாணையில் நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்திற்குரியது என்ற அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரரின் தாத்தா சுயநினைவின்றி மரணப்படுக்கையில் இருந்தபோது மேற்படி உயிலானது சட்ட முரணாக, மோசடியாக 1 ஆம் எதிர்மனுதாரரால் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் இச்சூழ்நிலையில் மேற்படி உயில் ஆவணத்தின் அடிப்படையில், 1 ஆம் எதிர்மனுதாரர் பொது அதிகார முகவர் மூலமாக பல்வேறு விற்பனை ஆவணங்களை ஏற்படுத்தி மனுச் சொத்து முழுவதையும் விற்பனை செய்ய முயன்று வருகிறார் என்று மனுதாரருக்கு தெரிய வந்துள்ளதாகவும் மேலும் 2 முதல் 16 வரையான எதிர்மனுதாரர்களும் மனுச்சொத்தில் வில்லங்கங்களை ஏற்படுத்த முயன்று வருகின்றனர் என்பதை மனுதாரர் அறிந்து கொண்டதாகவும், மேலும் மனுச் சொத்தினை வில்லங்கங்களுக்கு உட்படுத்தும் சூழலில் வழக்கு விசாரணை தாமதம் அடைவதுடன் மனுதாரருக்கு கிடைக்கும் நீதி பறிக்கப்படுவதற்கு வழிகோலாக

அமையும் என்றும் மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வேண்டப்பட்டுள்ளது.

3) **1–ம் எதிர் மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு;**

மனுவில் பிரமாணப்பத்திரிக்கையில் 1, 2 வது பத்திகளில் குறிப்பிட்ட விபரங்கள் சரி என்றும் மனுதாரருக்கு தாவாச் சொத்துக்களில் எவ்விதமான உரிமையோ அனுபவமோ இல்லை என்றும் வழக்கு நிலுவையில் உள்ள போது உரிமை இல்லாமல் இந்த எதிர்மனுதாரர் தாவாச்சொத்துக்களில் ஓர் பகுதியினை 10 முதல் 12ம் எதிர்மனுதாரகளுக்கு உரிய மறுபயன் பெற்றுக்கொண்டு இந்த எதிர்மனுதாரரின் சொத்துக்களினை தமது பொது அதிகாரம் பெற்ற மு.வேலுச்சாமி மூலமாக சொத்துக்களை கிரையம் பெற்று வீடுகள் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் மேற்படி தாவாச்சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் மேற்படி சொத்துக்களில் மனுதாரருக்கு எவ்விதமான உரிமையோ அனுபவமோ இல்லை என்றும் மேற்படி கிரைய விபரங்களை கிரைய தேதியிலேயே மனுதாரர் அறிவார். மனுவின் பிரமாணப்பத்திரிக்கையில் 4வது பத்தியில் குறிப்பிட்ட விபரங்கள் தவறானவை. சொத்தில் எவ்விதமான உரிமையும் இல்லாத நிலையில் 10 முதல் 12ம் எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் இடைகால தடையுறுத்து கட்டளை கோரும் மனு நிலைககத்தக்கதல்ல என்றும் மேற்படி அசல் வழக்கில் இ.ம.எண்.1788/2012 மனுவில் இதே தடையுறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரிய மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும் இதே பரிகாரம் கோரி மேற்படி உத்தரவு இ.ம.எண்.1788/2012–னை பொறுத்து எவ்விதமான மேல்முறையீடும் செய்யாமல் தாக்கல் செய்த இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கின் தரப்பினர் அல்லாத சில எதிர்மனுதாரர்கள் மீது இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் இந்த எதிர்மனுதாரரினை தொந்தரவு செய்திடவும் சொத்துக்களில் இந்த எதிர்மனுதாரரின் அனுபவத்தினை இடையூறு செய்திட தாக்கல் செய்த இம்மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகள் கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டுமா என்பதுதான் இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயமாகும்.**

5.1.) இந்த அசல் வழக்கு ஆனது பாகப்பிரிவினை கோரி ஒன்றாம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சொத்து மனுதாரரின் தந்தை வழி தாத்தா நடராஜ கவுண்டரின் பாகப்பிரிவினை சொத்தாகும். கடந்த 11.09.1998–ல் மேற்படி நடராஜ கவுண்டர் காலமானதற்கு பின்னிட்டு மனுதாரரும் ஒன்றாம் எதிர்மனுதாரரும் மனு சொத்தினை கூட்டாக சுவாதீனத்தில்

வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்று மனு பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றாம் எதிர்மனுதாரரின் சகோதரி திருமதி. சரோஜினி என்பவர் மனுசொத்தை பொறுத்து பாகப்பிரிவினை கோரி மாண்புமிகு திருப்பூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.103/2012 தொடரப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.103/2012 ஆனது இந்த அசல் வழக்கினை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்நீதிமன்றத்தில் இந்த அசல் வழக்கு நிலுவையில் உள்ள போதே மனு சொத்தின் சில பகுதிகளை ஒன்றாம் எதிர்மனுதாரரின் பொது அதிகார முகவர் வாயிலாக 2 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்கள் விற்பனை பெற்றுள்ளதாகவும் மனு சொத்திணைப் பொறுத்து முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மற்றும் இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள போதே மனு சொத்தின் ஒரு பகுதியை ஒன்றாம் எதிர்மனுதாரர் 2 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு சட்டவிரோதமாக விற்பனை செய்துள்ளதாக மனு பிரம்மாண வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2.) இந்த அசல் வழக்குகள் நிலுவையில் உள்ள போதே மேலும் மேலும் மனு சொத்துக்கள் குறித்து விற்பனை செய்யப்படுவதால் மனுதாரரின் உரிமை மற்றும் மனதாரருக்கு கிடைக்கக்கூடிய நீதி இயற்கை நீதிக்கு முரணானதாக உள்ளதாகவும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுவில் குறிப்பிட்டுள்ளபடி இடைக்கால உறுத்து கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்திருப்பதை

அறிய முடிகிறது. ஒன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் முன் வைத்துள்ள எதிர்வாதமானது 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமலேயே அவர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்து கட்டளை பரிகாரம் கோரப்பட்டு இருப்பது நிலைக்காது என்றும் ஏற்கனவே இடை மனு எண்.1788/2012–ல் இதே பரிகாரம் கோரி தாக்கல் செய்த மனுவானது செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் அந்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்யாமல் இம்மனுவினை தாக்கல் செய்திருப்பது நிலைக்காது என்றும் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது . இரு தரப்பு வாதங்களை கவனமாக கருத்தில் எடுத்துக் கொண்டு வழக்கு கோப்பினை பரிசீலகையில், மனுதாரர் தரப்பில் இம்மனுவில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. குறியீடு செய்யப்படாத ஆவணங்களை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

5.3.) இம்மனுவில் 10 முதல் 12 எதிர் மனுதாரர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஆனால் மேற்கண்ட மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒரு தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. இ.ம.எண்.1788/2012–ன் உததரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை. மனுதாரர் தன்னுடைய மனுவில் மூன்று பரிகாரங்களை கோரியுள்ளார். மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யாததாலும், மனு சொத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமை இன்னும் முடிவாகாத நிலையிலும், மனுதாரருக்கு மனு சொத்தில் உரிமை உள்ளதா

இல்லையா என்பது குறித்து சாட்சிய விசாரணைகளுக்கு பிறகு தான் தெரியவரும் என்பதாலும், அசல் வழக்கில் தரப்பினர்களாக இல்லாத எதிர்மனுதாரர்களையும் இம்மனுவில் தரப்பினர்களாக சேர்த்து மனு தாக்கல் செய்துள்ளதாலும், ஒரே மனுவில் மூன்று பரிகாரங்களை கோரி மனு தாக்கல் செய்துள்ளதாலும், இம்மனு சட்டப்படி அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 20.01.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.01.20 20:28:56 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை:** இல்லை.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.01.20 20:29:02 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.18/2020
அ.வ.எண்.641/2012
சீரான/வரைவு உத்தரவு
நாள்.20.01.2023
மா.உ.நீ., அவிநாசி